# யூலை – 02 – செவ்வாய்

**“நம்பிக்கை குன்றியவர்களே, ஏன் அஞ்சுகிறீர்கள்?” மத் 8:26**

---

## முதல் வாசகம் : தொடக்க நூல் 19 : 15 - 29

அந்நாட்களில் பொழுது விடியும் வேளையில் தூதர்கள் லோத்தை நோக்கி, ”நீ எழுந்திரு! உன் மனைவியையும், உன் இரு புதல்வியரையும் கூட்டிக்கொண்டு போ! இல்லையேல், இந்நகரின் தண்டனைத் தீர்ப்பில் நீயும் அகப்பட்டு அழிவாய்” என்று வற்புறுத்திக் கூறினார்கள். அவர் காலந்தாழ்த்தினார். ஆண்டவர் அவர் மீது இரக்கம் வைத்திருந்ததால், அந்த மனிதர்கள் அவரது கையையும், அவர் மனைவியின் கையையும், அவர் இரு புதல்வியர் கையையும் பிடித்துக் கொண்டுபோய் நகருக்கு வெளியே விட்டார்கள். அவர்களை வெளியே அழைத்து வந்தவுடன் அந்த மனிதர்கள் அவரை நோக்கி, ”நீ உயிர்தப்புமாறு ஓடிப்பேர் திரும்பிப் பார்க்காதே சமவெளி எங்கேயும் தங்காதே. மலையை நோக்கித் தப்பி ஓடு இல்லையேல் அழிந்து போவாய்” என்றார்கள். லோத்து அவர்களை நோக்கி ”என் தலைவர்களே, வேண்டாம். உங்கள் அடியானுக்கு உங்கள் பார்வையில் இரக்கம் கிடைத்துள்ளது. என் உயிரைக் காக்கும் பொருட்டு நீர் காட்டிய பேரன்பு உயர்ந்தது. ஆயினும் மலையை நோக்கித் தப்பியோட என்னால் இயலாது. ஓடினால் தீங்கு ஏற்பட்டு, நான் செத்துப்போவேன். எனவே, நான் தப்பியோடிச் சேர்வதற்கு வசதியாக, இதோ ஒரு நகர் அருகிலுள்ளது. அது சிறியதாய் இருக்கிறது. அதற்குள் ஓடிப்போக விடுங்கள். அது சிறிய நகர் தானே? நானும் உயிர் பிழைப்பேன்” என்றார். அதற்கு தூதர் ஒருவர், ”நல்லது, அப்படியே ஆகட்டும். இக்காரியத்திலும் உனக்குக் கருணை காட்டியுள்ளேன். நீ கேட்டபடி அந்நகரை நான் அழிக்க மாட்டேன். நீ அங்கு விரைந்தோடித் தப்பித்துக் கொள். நீ அங்குச் சென்று சேருமட்டும் என்னால் ஒன்றும் செய்ய இயலாது” என்றார். இதனால் அந்த நகருக்குச் ”சோவார்” என்னும் பெயர் வழங்கிற்று. லோத்து சோவாரை அடைந்தபோது கதிரவன் மண்ணுலகின் மேல் உதித்திருந்தான். அப்பொழுது ஆண்டவர் வானத்திலிருந்து சோதோம், கொமோரா நகர்களின்மேல் கந்தகமும் நெருப்பும் பொழியச் செய்தார். அந்நகரங்களையும் அவற்றைச் சுற்றியிருந்த சமவெளி முழுவதையும் அழித்தார். நகர்களில் வாழ்ந்த அனைவரையும், நிலத்தில் தளிர்த்தனவற்றையும் அழித்தார். அப்பொழுது லோத்தின் மனைவி திரும்பிப் பார்த்தாள். உடனே உப்புத்தூணாக மாறினாள். ஆபிரகாம் காலையில் எழுந்திருந்து, தாம் ஏற்கனவே ஆண்டவர் திருமுன் நின்ற இடத்திற்குப் போனார். அவர் சோதோமையும் கொமோராவையும் சூழ்ந்திருந்த நிலப்பகுதியையும் நோக்கிப் பார்த்தபோது சூளையின் புகைபோல நிலப்பரப்பிலிருந்து புகை கிளம்பக் கண்டார். கடவுள் சமவெளி நகர்களை அழித்தபோது, ஆபிரகாமை நினைவு கூர்ந்தார். எனவே லோத்து குடியிருந்த நகர்களை அழித்தபோது கடவுள் அவரைக் காப்பாற்றினார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது பேரன்பு என் கண்முன் இருக்கின்றது

## நற்செய்தி : மத்தேயு 8 : 23 - 27

அக்காலத்தில், இயேசு படகில் ஏறவே, அவருடைய சீடர்களும் அவரோடு ஏறினார்கள். திடீரெனக் கடலில் பெருங்கொந்தளிப்பு ஏற்பட்டது. படகுக்குமேல் அலைகள் எழுந்தன. ஆனால் இயேசு தூங்கிக்கொண்டிருந்தார். சீடர்கள் அவரிடம் வந்து, ”ஆண்டவரே, காப்பாற்றும், சாகப் போகிறோம்” என்று சொல்லி அவரை எழுப்பினார்கள். இயேசு அவர்களை நோக்கி, ”நம்பிக்கை குன்றியவர்களே, ஏன் அஞ்சுகிறீர்கள்?” என்று கேட்டு, எழுந்து காற்றையும் கடலையும் கடிந்துகொண்டார். உடனே மிகுந்த அமைதி உண்டாயிற்று. மக்களெல்லாரும், ”காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றவே! இவர் எத்தகையவரோ?” என்று வியந்தனர்.

**தியானம்:** இன்றைய உலகில் நம்பிக்கை குறைந்துகொண்டு போகின்றதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. கடவுள் இல்லை என்று கூறுபவர்கள் ஏராளம். ஆலயத்திற்கு செல்லும் மக்கள் குறைவு. அனேக ஆலயங்கள் பராமரிக்க முடியாமல் பூட்டப்படுகின்றன. சில ஆலயங்கள் குடியிருப்பாளர்களுக்கு விற்கப் படுகின்றது. வயது முதிர்ந்தவர்களைத்தான் ஆலயங்களில் காண முடிகின்றது. இளம் சமுதாயம் செல்வது குறைவாக உள்ளது. இந்த நிலையில் இன்றைய முதல் வாசகம் நமக்கு ஒரு எச்சரிக்கையை தருகின்றது. அது சொதோம் நாட்டின் அழிவு. பாவம் பெருகிய காரணத்தால் அந்நகர் அழிக்கப் படுகின்றது. லோத்தின் குடும்பம் காப்பாற்றப் படுகின்றது. அவர் நீதிமானாக இருந்தார். கடவுளுக்கு உகந்த வாழ்வு வாழ்ந்தார். நாமும் கடவுளுக்கு உகந்த வாழ்வு வாழும்போது அழிவில் இருந்து காப்பாற்றப் படுவோம் என்ற செய்தியை இது எமக்கு உணர்த்துகின்றது. நற்செய்தியில் பார்ப்பதுபோல பலவிதமான புயல் எம் வாழ்வில் வீசுவதால் நாம் நிலை குலைந்து விடுகின்றோம். தடுமாறுகின்றோம், அதனால் தடம் மாறுகின்றோம். கடவுளை விட்டு விலகி வேறு மனிதர்களில் அவர்கள் சொல்லும் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்துவிடுகின்றோம். நம்பிக்கை குன்றியவர்களாக மாறி விடுகின்றோம். ஆனால் யேசு நான் உன்னோடு இருக்கையில் ஏன் அஞ்சுகிறீர்கள்?” என்று கேட்கின்றார். கடவுள் எம்மை தமது சாயலாக படைத்தார். எம்மை அன்பு செய்கின்றார். நாம் அழிந்து போவதை அவர் விரும்பவில்லை. எவ்வாறு சொதோம் நாட்டில் உள்ள எல்லா மக்களும் அழிக்கப்பட லோத்து மட்டும் காப்பாற்றப் பட்டாரோ அவ்வாறு நாமும் காப்பாறப்படுவோம். அதற்கு எம் வாழ்வு நீதியானதாக உண்மையானதாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட வாழ்வை நாம் வாழ்வோமா?